Registered as a News Paper in Ceylon

★

விலை சதம் 15

அனைவருக்கும் எமது பொங்கல்
வாழ்த்துகள் உரித்தாகுக

மில்க்வைற் நீலசோப் பார்சோப்
சலவைப்பவுடர் மேலுறைகளைச்
சேகரித்து அனுப்பி பரிசுகளைப்
பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற்
சோப் தொழிற்சாலை
த. பெ. இல. 77 - யாழ்ப்பாணம்.

# ஈழநாடு

EELA NADU

தேசிய தினசரி

எல்லோர்க்கும் எமது
பொங்கல் வாழ்த்துக்கள்



புத்தரிசிச்சிக்கும் [illegible]
அண்ணா
கோப்பி

அண்ணா இண்டஸ்றி
இணுவில்.

மலர் 12 | தை 1 | ஜுலியகஸ் 16 | (14-1-71) | வியாழக்கிழமை | இதழ் 335

# மகாதேசாதிபதிக்கு வடக்கில் 15 இடங்களில் வரவேற்பு

## அமைச்சர்கள், செனட்டர்கள் எம். பி.க்களும் வருகின்றனர்

யாழ்ப்பாணம், வியா. வடபகுதிக்கு முதல் தடவையாக மகாதேசாதிபதி திரு. வில்லியம் கோபல்லவா உத்தியோக பூர்வமாக இம் மாதம் 16-ம் தேதி விஜயம் செய்வது சரித்திரத்தில் இடம் பெறக் கூடிய நிகழ்ச்சியாகும். மல்லேலிய ஓயா திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு மின்சாரம் வழங்கும் வைபவத்தில் மகாதேசாதிபதி கலந்து கொள்வார்.

மகாதேசாதிபதியுடன் நீர்ப்பாசன மின்சக்தி அமைச்சரும் பதில் பிரதமருமான திரு. மைத்திரிபாலா சேனநாயக்காவும் மற்றும் அமைச்சர்களும் மேற்சபை உறுப்பினர்



களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் இம்மாதம் 16-ம் தேதி வடபகுதிக்கு விஜயம் செய்கின்றனர்.

ஆகாயவிமானப்படையை சேர்ந்த விசேஷவிமானத்தில் மகாதேசாதிபதியும் அவருடன் வரும் குழுவினரும் 16-ம் தேதி காலை 9-30 மணிக்கு பலாலி விமான நிலையத்தை வந்தடைவார்கள் அங்கு யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகராவினால் வரவேற்கப்படுவார்.

காலை 10 மணிக்கு பலாலி விமானநிலயத்திலிருந்து ராஜபவனியாக மகாதேசாதிபதி யாழ்ப்பாணம் கிங்ஸ் ஹவுஸுக்கு அழைத்து செல்லப்படுவார்.

வசாவிளான், புன்னாலைக்கட்டுவன், கோண்டாவில், திருநெல்வேலி ஆரியகுளம் ஆகிய இடங்களில் மகாதேசாதிபதிக்கு வரவேற்பு அளிக்கப்படும்.

காலை 11-45 மணிக்கு மகாதேசாதிபதி யாழ்ப்பாணம் நாகவிகாரைக்கும் 12-10 மணிக்கு நல்லூர் கந்தசாமி கோவிலுக்கும் சென்று வழிபாட்டில் கலந்து கொள்வார்.

மாலை 5-20 மணிக்கு யாழ் பொலிஸ் நிலையசந்தியிலிருந்து மகாதேசாதிபதி ஊர்வலமாக மாநகரசபை வளவுக்கு அழைத்துச் செல்லப்படுவார். மாலை 5-40 மணிக்கு மாநகர சபை வளவில் உள்ள ஞாபகச்சின்னத்தை திறந்து வைப்பார். இவ்வைபவம் முடிவடைந்ததும் மகாதேசாதிபதியும் மின்சக்தி அமைச்சரும் கிங்ஸ்ஹவுஸுக்கு செல்வார்கள்.

மாலை 6-15 மணிக்கு யாழ் திறந்தவெளி அரங்கில் நடைபெறும் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு மல்லேலியா ஓயாத்திட்ட

(8-ம் பக்கம் பார்க்க)

'ஈழநாடு'
விளம்பரதாரர்களுக்கும்
வாசகநேயர்களுக்கும்
பொங்கல்
வாழ்த்துக்கள்

கிரிக்கட்

## இங்: 319
## ஆஸ்: 64-4

சிட்னி, ஜன. 13

சிட்னியில் நடைபெறும் இங்கிலாந்துக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையிலான கிரிக்கட் போட்டி வெளிச்சமின்மை காரணமாக முன் கூட்டியே நிறுத்தப்பட்டது.

இங்கிலாந்து கோஷ்டி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 5 விக்கட்டுகளை இழந்து 319 ரன்கள்எடுத்த பின்னர் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

545 நிமிடங்களில் 416 ரன்களை எடுத்தால் மாத்திரமே வெற்றிபெற முடியும் என்ற நிலையில் அவுஸ்திரேலிய கோஷ்டி துடுப்பெடுத்தாடி ஆட்டம் நிறுத்தப்பட்டபோது நான்கு விக்கட்டுகளைஇழந்து 64 ரன்கள் எடுத்திருந்தது.

### வணக்கம்!

புதுமையை விரும்பாதவர்கள் யார்? பழமையை மறந்து கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்பது புதுமையாகாது.

இன்றைய 'ஈழநாடு' உங்கள் கரங்களில் தவழும்போது "புதுமையாக இருக்கிறதே!" என்று உங்களில் பலர் ஆச்சரியப்படலாம். அதே சமயம், "எங்கள் விருப்பத்துக்கு மதிப்பளித்திருக்கிறதே" என மகிழ்ச்சியடையும் பலரும் இருக்கலாம்.

கைக்கு அடக்கமாக, சவுகரியமாக ரயிலிலும், பஸ்ஸிலும், காரிலும், ஏன் மாட்டு வண்டிகளிலும் கூடப் பிரயாணம்செய்யும்போதே ஈழநாடு பத்திரிகையைச் சிரமமின்றிப் படிக்க வேண்டும்; முன்னர் போல் பழைய அளவுக்கே அதன் அமைப்பை மாற்றிவிடுங்கள் என்று கேட்ட வாசகநேயர்களும் விளம்பரதாரர்களும் ஏராளம், ஏராளம்.

ஆனாலும் பத்திரிகையின் அமைப்பை அடிக்கடி மாற்றுவது அழகல்ல எனக் கருதினோம். அவர்கள் விட்டபாடாக இல்லை. அன்புக் கட்டளையைப் புறக்கணிப்பது பண்பல்ல.

எனவேதான் உங்கள் விருப்பத்துக்கேற்ப உங்கள் பத்திரிகை இன்று தொடக்கம் கைக்கு அடக்கமாக பழைய அமைப்பில் வெளிவருமென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

இது இன்று நீங்கள் கொண்டாடும் பொங்கல் போன்று தித்திப்பான செய்தி என்பதை நாம் அறிவோம். உங்கள் ஆதரவு என்றும் நமக்கு உண்டென்பதையும் நாம் அறிவோம்.

உங்களுக்கு எங்கள் பொங்கல் வாழ்த்துக்கள்.

வணக்கம்

— ஆசிரியர்

### விவாகம்

சமாதான நீதவான் க. த. [illegible] அவர்களின் சற்புத்திரன் அருளானந்தம் செனட்டர் நடராசா அவர்களின் சற்புத்திரி அமிர்தாம்பிகை. விவாகம் மருதனாமடம் [illegible] திருமண மண்டபத்தில் ஜனவரி 18-ந் திகதி பி. ப. 4-45க்கு நடைபெறும். இலங்கை சுதேசி இயக்கத்திற்கு ஆதரவளிக்கும் பொருட்டு மணமக்கள் உட்பட இளைஞர் மித்திரர்கள் சுதேசி ஆடைகள் அணிவர். இ/ம. இலங்கை சுதேசி இயக்கம் [illegible] பெறுகிறது. 2728

இப்போது ஒரு பொங்கல் தினசரி அதிர்ஷ்டம்!
ஜனவரி 15 சாவகச்சேரியில் நடைபெறுகிறது!
ஒரு டிக்கெற் 1/50 சதம்.
● தேசிய லொத்தர் சபை

## வரி விளம்பரம்

### பயிற்சி

எங்களிடம் மோட்டார் றிவைண்டிங் ஒரு வருடம் பயிற்சி பெற்றால் மாதம் ரூபா 300/- பெறலாம். விபரங்களுக்கு: இன்டஸ்றியல் கிராப்ட்ஸ் இன்ஸ்றியூற், 443/5, கே. கே. எஸ். வீதி, சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். 2646

### விற்பனைக்கு

காணி:

சுந்தர்மடம் - 3 கட்டிடத் துண்டுகளாகப் பிரிக்கக் கூடிய 5 1/2 பரப்புக் காணி கிணற்றுடன் பழம் றோட்டு முகப்பில் விற்பனைக்குண்டு. C. சிவப்பிரகாசபிள்ளை, மருதனுமடம், சுன்னுகம். 2651

4 ஸ்ரீ ஹொண்டா 2.5 மோட்டார் சயிக்கிள் உடனே விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். இராசா சயிக்கிள் வேக்ஸ், தெல்லிப்பளை. 2648

### தேவை

ஆசிரியர்:

H. S. C. பெண், G. C. E. ஆண் இருவருக்கும் ஆங்கிலம், தூயகணிதம் மாலையில் வீட்டில் கற்றுக் கொடுக்க திறமையும் அனுபவமும் வாய்ந்த ஆசிரியர் உடனே தேவை. தகுந்த சம்பளம் கொடுக்கப்படும். யாழ்ப்பாணப் பட்டின எல்லைக்குக் கிட்ட உள்ள ஓய்வு பெற்ற ஆசிரியர் விரும்பத் தக்கது. விரும்புவோர் தொடர்பு கொள்ளவும், விளம்பர இலக்கம் 2650 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 2650

இன்று

## யாழ். மாவட்ட நாடகப்போட்டி

யாழ்ப்பாணம், வியாழன் சித்தன்கேணி சிவச்செல்வி கலாமன்றம் யாழ். மாவட்ட ரீதியில் பொங்கலன்று நடாத்தும் யாழ். மாவட்ட நாடகப் போட்டிக்கான இறுதித் தெரிவு இன்று மாலை 6 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் மன்றத் தலைவர் திரு. வ. உமாபதி தலைமையில் நடைபெறவிருக்கிறது வலி மேற்குக் காரியாதிகாரி திரு. என். மாணிக்க நடராசா மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்துவைப்பார். திரு. வே தம்பையா வரவேற்புரை நிகழ்த்துவார் யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை ஆசியுரை வழங்குவார்.

"என்றோ ஒரு நாள்", "கண்திறந்தது", "தியாகச் சுடர்", "நல்லதீர்ப்பு", "இரத்தமுத்திரை" ஆகிய 5 நாடகங்கள் இறுதித் தெரிவில் கலந்து கொள்கின்றன. திரு. ஏ. ரி. பொன்னுத்துரை இடைத் தெரிவு இறுதித் தெரிவு நாடகங்கள் பற்றிய குறிப்புரை வழங்குவார். பரிசு பெறும் நாடகங்களுக்கு கலையரசு சொர்ணலிங்கம் பரிசில்களை வழங்குவார்.

முதற்பரிசு பெறும் நாடகத்துக்குத் தங்கப்பதக்கமும் இரண்டாம், மூன்றாம் பரிசு பெறும் நாடகங்களுக்கு வெள்ளிப்பதக்கங்களும் வழங்கப்படும் சிறந்த நடிகர், நடிகை, டைரக்டர் ஆகியோர்க்கும் பரிசில்கள் வழங்கப்படும் இடைத் தெரிவு இறுதித் தெரிவில் கலந்து பாராட்டுப் பெறும் நாடகங்களுக்கும் பாராட்டுப் பத்திரங்கள் வழங்கப்படும்.

## கண்டு பிடிக்க முடியுமா?



இப்படத்தில் உள்ள எனது கணவன் பிரான்சிஸ் அன்ரன் ராஜநாயகம் யாழ்ப்பாணத்தில் கண்டிக்குளியிலும் மாதகலில் மடத்துவாசல் என்னும் இடத்தையும் சேர்ந்தவர். தற்சமயம் எங்கிருக்கின்றார் என்ற விபரங்களைத் தெரிவிப்பவருக்கு ரூபா 50/- சன்மானம் வழங்கப்படும்.

திருமதி பிரான்சிஸ் அன்ரன் ராஜநாயகம்
16, 1-வது ஒழுங்கை
2725 கொழும்பு-5

உரும்பராய் ப.ச.

## உப-தலைவர் தெரிவு

யாழ்ப்பாணம், வியா உரும்பராய்-ஊரெழு பட்டினசபை உபதலைவர் தெரிவு நடைபெற்று விட்டதாக "ஈழநாடு" பத்திரிகையில் தவறுதலாக வெளியிட்ட செய்திக்கு வருந்துகிறோம். இப்பட்டினசபை உபதலைவர் தெரிவு விரைவில் நடைபெறவிருக்கிறது.

## நாளை ஆரம்பம்

கோட்டை, புதன் கட்டுபெத்தைத் தொழில் நுட்பக் கல்லூரி தந்தித் தொலைபேசித் தொடர்புப் பரீட்சகர்களுக்கான பயிற்சி வகுப்பு இம்மாதம் 15-ந் திகதி ஆரம்பிக்கப்படும்.

## அறிவித்தல்

1. நாச்சிக்குடா மீன்பிடி இலாகா றோட்டுக் கான கேள்விகள் அழைக்கப்படுகின்றன. 20-1-71 தொடக்கம் 23-1-71 வரையும் சீல் வைத்த கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்

1. கேள்விப்பத்திர விலை ரூபா... 10-00
2. கேள்விப்பத்திர பிணை ரூபா... 50-00

கேள்விப் பத்திரங்கள் யாவும் 27-1-71-ம் திகதி நடைபெறும் கிராமசபைக் கூட்டத்தில் நண்பகல் 12 மணிக்கு முன்னர் அக்கிராசனர் அவர்கட்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்புதல் வேண்டும், அதே நேரத்தில் யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அவர்கட்கு கிடைக்கக்கூடியதாக கேள்வியின் மறுபிரதி அனுப்புதல் வேண்டும்,

மேலும் வேண்டிய விபரங்கள் யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் அல்லது பல்லவராயன்கட்டுக் கிராமசபை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

2. 27-1-71-ம் திகதி நடைபெறும் கிராமசபைக் கூட்டத்தில் பல்லவராயன் கட்டுக் கிராமசபையின் எல்லைக்குட்பட்ட மேச்சல் தரவைகள் எருக் குத்தகைக்கு கேள்விப்பத்திரமூலம் விற்கப்படும்.

கேள்விப்பத்திரங்கள் கி. ச. காரியாலயத்தில் 24-1-71-ம் திகதியும் 25-1-71-ம் திகதியும் காலை 9-00 மணிமுதல் மாலை 4-00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

அக்கிராசனர்,
பல்லவராயன் கட்டுக் கிராமசபை,
வேரவில்.

2730


சினிமா ரசிகர்களுக்கும் மற்றும் அன்பர்களுக்கும் எமது உளம் நிறைந்த பொங்கல்வாழ்துகள்
REGAL
Jaffna
Daily 4-45, 7, 9-45 p. m.
Poya days 4 shows
Stewart Granger
in
THE TRYGONE FACTOR
(Technicolor)

தேவேந்திரா
சாவகச்சேரி
பொங்கல் வெளியீடு
இன்றுமுதல் பி. ப. 2-30 காட்சியுடன் ஆரம்பம்
ஜெமினி, விஜயகுமாரி, ஆனந்தன், சுகுமாரி
நடித்த
பொற்சிலை

ரசிகப்பெருமக்கள் மற்றும் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எஸ். ரி. ஆர்.
பிலிம்ஸ் ஸ்தாபனத்தார்
தமது அன்புகலந்த
பொங்கல் வாழ்த்துக்களை
தெரிவிக்கின்றனர்
ராஜா - யாழ்.நகர்
தினசரி காலை 10. பிற்பகல் 2, மாலை 6, இரவு 9-30
ஏசுநாதர்-தமிழ்
இப்படத்துடன்
அண்ணாவின் இறுதியாத்திரை
எல்லா காட்சிகளிலும் காண்பிக்கப்படும்
அத்துடன்
பாப்பரசரின் இலங்கை விஜயம் தமிழில்
40 நிமிடங்கள் வரை காண்பிக்கப்படும்.

சினிமா ரசிகர்கள்
மற்றும்
அன்பர்கள் - ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது
பொங்கல் வாழ்த்துக்கள்
வின்ஸர்- யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி கணேசன் - சௌகார் ஜானகி
நடித்த
சக்கரம்

சினிமா ரசிகர்களுக்கும் மற்றும் அன்பர்களுக்கும் எமது உளம் நிறைந்த பொங்கல் வாழ்த்துகள்
மனோகரா - யாழ்ப்பாணம்
தினசரி 3 காட்சிகள்
போயா நாட்கள் 10-30 மெற்னி



ராஜ்குமார் - ராதிகா - ஜோதிலட்சுமி
நடித்த
ஜாக்பாட்டில் ஸி. ஐ. டி. 999


14·1·71

## திருமண அழைப்பு

நிகழும் சாதாரண வருஷம் தை மாதம் 4-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை (17-1-1971) காலை 10-15 மணிக்கும் 11-15 மணிக்குமிடையில் வரும் சுபமுகூர்த்தத்தில்,

எமது புத்திரி
திருவளர் செல்வி
யோகாம்பிகைக்கும்

திருமதி பொ. முருகேசு
அவர்களின் புதல்வன்
திருநிறை செல்வன்
மு. கனகசுந்தரம்
[மகாலிங்கம்]
அவர்களுக்கும்
[12, கம்பனாவீதி, நாவலப்பிட்டி]

நல்லூர் சிவன்கோவில் மண்டபத்தில்

### திருமணம்

நடைபெறத் திருவருள் பாலித்திருக்கிறது. இவ் வைபவத்திற் கலந்து கொண்டு, மணமக்களை ஆசீர்வதிக்குமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

க. கி. நடராஜன் தம்பதிகள்
"யோக பவனம்"
பொன்னப்பாவீதி.
வண்ணார்பண்ணை.

திரு. மு. மாணிக்கவாசகர்
தம்பதிகள்
(மணமகனின் சகோதரனும் பாரியாரும்)
13/1. கச்சேரி கிழக்கு வீதி,
சுண்டிக்குளி.

2726


சினிமா ரசிகர்களுக்கும் மற்றும் அன்பர்களுக்கும் எமது உளம் நிறைந்த
பொங்கல் வாழ்த்துக்கள்
ராணி சினிமா
யாழ்ப்பாணம்
தினசரி 3 காட்சிகள்
சிவாஜிகணேசன் - சரோஜாதேவி
ஜெய்சங்கர் — விஜயநிர்மலா
நடித்த
அன்பளிப்பு

# இந்திரா காங்கிரஸுக்கே காளைச் சின்னம்!

## எதிர்த்து அப்பீல் செய்யும் நிஜலிங்கப்பா காங்கிரஸ்

புதுடில்லி, ஜன 13 காளைமாட்டுச் சின்னம் திரு ஜகஜீவன்ராம்தலைமை காங்கிரஸிற்குத்தான உரியது என்று இந்தியப் பிரதம தேர்தல் கமிஷனர் அளித்துள்ள தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்யப்போவதாக திரு. நிஜலிங்கப்பா காங்கிரஸ் முடிவு செய்திருக்கின்றது.

பாரத தேசிய காங்கிரஸ் கட்சி இரண்டாகப் பிரிந்ததைத் தொடர்ந்து கட்சியின் தேர்தல் சின்னமான காளைமாட்டுச் சின்னம் எப்பிரிவுக்குரியது என்ற சர்ச்சை எழுந்தது. இதுபற்றிய முடிவை அறிவிக்கும்படி பிரதம தேர்தல் கமிஷனர் திரு. சென்வர்மாவை இருபகுதியினரும் கேட்டுக்கொண்டனர். இதன்பேரில் திரு. சென்வர்மா தமது தீர்ப்பை நேற்று முன்தினம் அறிவித்தார். தேர்தல் சின்னம் திரு ஜெகஜீவன்ராம் காங்கிரஸிற்குத்தான் உரியது என்று அவர் தமது தீர்ப்பைத் தெரிவித்திருந்தார்.

திரு. ஜெகஜீவன்ராம் காங்கிரஸில் திரு. நிஜலிங்கப்பா காங்கிரஸைவிட அதிக பிரதிநிதிகள் இருக்கிறார்கள் என்ற காரணத்தினாலும் வேறுபலகாரணங்களாலும் காளைமாட்டுச் சின்னம் அவர்களுக்கே உரியதுஎன்று தாம் முடிவு எடுத்ததாக அவர் தெரிவித்திருந்தார். லோகசபையிலும் ராஜ்ய சபையிலும் திரு. ஜெகஜீவன் காங்கிரஸ் அங்கத்தவர்களே அதிகமாக இருப்பதாயும், இருசபைகளின் தலைவர்களும் அதேபிரிவைச் சேர்ந்தவர்களாகவே இருக்கிறார்கள் என்பதையும் திரு. சென்வர்மா சுட்டிக் காட்டியிருந்தார்.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து திரு. நிஜலிங்கப்பா தலைமைக் காங்கிரஸார் அப்பீல் செய்யப்போவதாகஅறிவித்துள்ளனர்.

## காஷ்மீர் வாக்குக்கணிப்பு முன்னணிக்குத்தடை

ஜம்மு-காஷ்மீரில் இயங்கி வரும் வாக்குகணிப்பு முன்னணியை இந்திய அரசு தடைசெய்துள்ளது.

இந்த முன்னணியின் தலைவர்கள் ஷேக் அப்துல்லா உட்பட பலரை ராஜ்யத்துக்குள் வர வேண்டாமென ஏற்கனவே ராஜ்ய அரசு தடைவிதித்திருக்கின்றது.

வாக்குக்கணிப்பு முன்னணியின் நடவடிக்கைகள் பிரிவினையை அடிப்படையாகக் கொண்டிருப்பதுடன் மாணவர்களை வன்முறைகளில் தூண்டிவிடுபவையாக இருப்பதாகவும் இது உடனடியாகத் தடுக்கப்படாவிட்டால் ராஜ்ய பந்தோபஸ்துக்கும் அமைதிக்கும் ஆபத்து ஏற்படும் என்றும் மத்தியஅரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்முறைகளைத் தூண்டிவிடும்வகையில் இம்முன்னணித் தலைவர்களின் சொற்பொழிவுகள் இருந்துள்ளதாகவும் மத்தியஅரசு அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. முன்னணியின் இந்த நடவடிக்கைகள் சட்டவிரோதமானவையென்றும் அறிக்கை தெரிவிக்கின்றது.

## இந்திரா – பாங்களா காங்கிரஸ் இணைப்பு

மேற்குவங்காளத்தில் இந்திரா சார்பு காங்கிரஸ்கட்சியும் பாங்களா காங்கிரஸ் கட்சியும் இணைந்து தேர்தலில் போட்டியிடுவதற்கு முடிவு செய்துள்ளன.

மேற்கு வங்காளத்திலுள்ள இந்திரா சார்பு காங்கிரஸ் கட்சித் தலைவரும் பாங்களா காங்கிரஸ் கட்சித்தலைவர் திரு. அஜோஜ் குமார்முகர்ஜியும் சந்தித்துப்பேசிய பின்னர் இந்த முடிவை எடுத்துள்ளனர்.

### காமராஜரே வேண்டுமாம்

தமிழ் நாட்டில் நாகர்கோயில் தொகுதியில் திரு. கே. காமராஜரையே வேட்பாளராக நிறுத்தவேண்டும் என்று நிஜலிங்கப்பா தலைமைக் காங்கிரஸ் கட்சியின் கன்னியாகுமாரி கிளை கேட்டிருக்கின்றது கலைக்கப்பட்ட ஆட்சிமன்றத்தில் திரு காமராஜரே இத்தொகுதியின்எம். பி. யாகக இருந்து வந்தார்.

### கூப்பன் யாருடையது?

யாழ்ப்பாணம், வியாழன் கந்தர்மடத்தில் குப்பை மேட்டில் கண்டெடுக்கப்பட்ட கூப்பன் புத்தகம் ஒன்றுநாமாலையைச் சேர்ந்த அப்புதாயர் என்பவரால் ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் காரியாலயநேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

கோவில் திருட்டு சந்தேகநபர்

## பொலிசாரைக் கண்டதும் திராவகம் குடித்தாராம்

மட்டுவில், செவ் பொலிசாரைக் கண்டதும் மடியிலிருந்து நச்சுத்திராவகம் எடுத்துக் குடித்த நபர் காப்பாற்றப் பட்டதைத் தொடர்ந்து வடபகுதி ஆலய திருட்டுகள் சம்பந்தமாக பலமுக்கிய தகவல்களை அவர் வெளியிட்டாராம்.

பளை, இயக்கச்சி தொடக்கம், தாவடி, கோண்டாவில் வரை நடைபெற்ற ஆலயத் திருட்டுக்கள் சம்பந்தமாக கந்தசாமி என்ற ஒருநபரை சாவகச்சேரி பொலிசார் தேடிவந்தனர். குறிப்பிட்ட நபர் புகையிரத நிலையத்தில் வண்டிக்காக காத்து நிற்கிறார் என்றுகிடைத்த தகவலைத் தொடர்ந்து இரு கான்ஸ்டபிள்கள் புகையிரதநிலையத்திற்குச் சென்றனர் என்றும் பொலிசாரைக் கண்டதும் குறிப்பிட்டநபர் மடியிலிருந்துநச்சுத் திராவகத்தை எடுத்து குடித்தாரென்றும் சொல்லப்படுகின்றது.

இவரை உடனடியாக பொலிசார் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்று சிகிச்சை அளித்ததால் அவர் உயிர்காப்பாற்றப்பட்டதாம். இவரை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. கதிர்காமநாதன் விசாரணைக்குட்படுத்தியதில் தான் திருடிய ஆலயங்களையும், திருடிய பொருட்களையும், அவற்றை விற்ற இடங்களையும் விபரமாகக் கூறினாராம்.

இதன் பேரில் இன்ஸ்பெக்டர் முருகன்; வள்ளி; தெய்வானை சிலைகள் உட்பட மேலும் பல பொருட்களை மீட்டுள்ளார் இந்த நபரை சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. ஜே. ஜி ஆசிர்வாதம் முன்னிலையில் பொலிசார் ஆஜர் செய்தனர். சந்தேக நபரை இம்மாதம் 21-ம் தேதி வரை ரிமாண்டில் வைக்கும்படி மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

## மலேஷிய தி. க. கலை இலக்கியப் போட்டி

கோலாலம்பூர், ஜன. 12 மலேஷிய திராவிடர் கழகம் உலக எழுத்தாளர் ஓவியர்களிடையே போட்டியொன்றை நடத்துகிறது. தனது 25-ம் ஆண்டு வெள்ளி விழாவையொட்டி நானாவித போட்டிகளையும் நடத்தும். இக் கழகம் அனைத்துலக அடிப்படையில் பிரத்தியேகமாக கதை மற்றும் கட்டுரை, கவிதை ஓவியப் போட்டிகளை நடத்துகிறது. ஆண்டுவிழா இவ்வாண்டு ஏப்பிரலில் நடைபெறும்.

போட்டிகளில் கலந்து கொள்வோர் திரு ப. செழியன், தலைவர், கலை இலக்கியக்குழு த. பெ. 2125, கோலாலம்பூர், மலேஷியா என்ற முகவரிக்குத் தமது விஷயதானங்களை அனுப்பி வைக்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.


அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது உளம் கனிந்த

பொங்கல் வாழ்த்துக்கள்

**விக்னேஸ்வரா**

புடவை மாளிகை

பஸ் நிலையம் முன், யாழ்ப்பாணம்.

வட்டியுடன் இனும்!

ரூபா 500|- ஐஞ்ஞூறுக்கு

வருடம் 7 சதவித வட்டியுடன்
ஏழு நாள் அறிவித்தலில்
எப்பொழுதும் எடுக்கலாம்

ஒவ்வொரு மாதமும்
அதிட்டமுள்ள ஒருவருக்கு
ரூபா 25|- இருபத்தைந்து
இனுமாகக் கொடுக்கப்படும்

மறு விபரங்களுக்கு:

**தம்பி அன் கோ,**

வண்ணார்பண்ணை

அன்பர்கள் ஆதரவாளர்கள் அனுதாபிகள் அனைவருக்கும் எமது

பொங்கல் வாழ்த்துக்கள்

அரிய சேவையால் லட்சக்கணக்கான மக்கள் உள்ளங்களின் அமோக அன்பையும் ஆதரவையும் பெற்ற

நகை வியாபாரிகள்

**ஏ.கே.எஸ். அன் சன்ஸ்**

(நகை மாளிகை)

63, 65, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

போன்: 519

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது அன்புகலந்த

பொங்கல் வாழ்த்துக்கள்!

**செ. காசிப்பிள்ளை அன் கோ.**

(பிரபல புடவை வியாபாரிகள்)

82, கே. கே. எஸ். றோட் — யாழ்ப்பாணம்.

கிளை: சி கே பி 74/8 பெரியகடை, யாழ்ப்பாணம்.

## அறிவித்தல்

தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு 14—1—71 வியாழக்கிழமை 'ஈழநாடு' காரியாலயத்திற்கு விடுமுறையாதலால் 15—1—71 வெள்ளிக்கிழமை மட்டும் ஈழநாடு வெளிவர மாட்டாது.

### மணிவாக்கு

உண்மையைக் காப்பதிலே கடுமையாக இருக்க வேண்டும்; இது சங்கடமாகத் தோன்றும். ஆனால் உண்மையை மறைக்கமுயலும்போதுதான் சங்கடம் அதிகமாகும்.
— ரஸ்ஸல்.


# ஈழநாடு

Telegram: "EELANADU" Jaffna;
Post Box 49, Jaffna Telephone: ...

... மார்கழி மாதம் 29-ந் திகதி (13-1-71)


## தை பிறக்கிறது வழி பிறக்க வழி என்ன?

இன்று தை பிறக்கிறது. "தைபிறந்தால் வழிபிறக்கும்" என்பது தமிழில் உள்ள பழமொழி. இலங்கைவாழ் தமிழ் மக்கள் கடந்த பல ஆண்டுகளாக தை மாதம் பிறக்கும் போதெல்லாம் தமக்கு வழி பிறக்குமா? என்ற கேள்வியையே கேட்டுவருகின்றனர். இன்றும் அதே கேள்வியைத் தான் கேட்கிறார்கள்; வழிபிறக்கும் என்ற அதே நம்பிக்கையுடன் தான் இந்தக்கேள்வியை அவர்கள் கேட்கிறார்கள்.

ஆனால் அன்றையத் தமிழன் "தை பிறந்தால் வழிபிறக்கும்" என்ற புது மொழியை ஏற்படுத்திய போது அவன் அரசாங்க உத்தியோகத்தையோ, நாற்காலி உத்தியோகத்தையோ நம்பியிருக்கவில்லை. உழவையும் தொழிலையும் மட்டுமே நம்பியிருந்தான். பிறருக்குக் கைகட்டிச் சேவகம் செய்யும் நிலையில் இருக்கவில்லை. இன்றையத் தமிழன் குறிப்பாக இலங்கைத் தமிழன் பிறரின் தயவையே நம்பி வாழவேண்டியிருப்பதாக "தை பிறந்தால் வழி பிறக்குமா?" என்ற கேள்வியிலேயே நிற்கிறான். அன்றைய தமிழன் "தை பிறந்தால் வழிபிறக்கும்" என்ற நம்பிக்கையுடன் எதிர்காலத்தை வரவேற்கிறான். இன்றையத் தமிழன் வழிபிறக்குமா? என்று பெருமூச்சுவிடுகிறான்.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்து வாழ்ந்தவன் அன்றையத் தமிழன். இன்று அந்நிய நாட்டு அரசிக்கும் அடிமைத் தொழிலுக்கும் வந்தனை செய்து அது வாய்க்கவில்லையெனில் நிந்தனைசெய்து வாழும் நிலையிலிருக்கின்றான்.

இந்த நிலையை மாற்ற முடியாதா? முடியும்!

பழம்பெருமையை மட்டும் பேசிக்கொண்டிருப்பதில் பயனில்லை. இதற்காகப் பழையவற்றையெல்லாம் மறந்து, துறந்துவிடவேண்டும் என்பதல்ல. மோட்டார் காரில் அதன் சாரதியின் தலைக்கு நேரே ஒரு சிறிய கண்ணாடியும் முன்பாகப் பெரிய அகலமான கண்ணாடியும் பொருத்தப்பட்டிருக்கின்றன. சிறிய கண்ணாடி பயணம் வந்த பாதையைப் பார்த்துக்கொள்வதற்கும் பெரிய கண்ணாடி பயணம் போகும் பாதையைத் தெளிந்து தெரிந்துகொள்வதற்கும் உபயோகப்படுகின்றன. பயணம் வந்த பாதையைப் பார்ப்பதற்குப் பெரிய கண்ணாடியும் பயணம் போகும் பாதையைத் தெரிந்துகொள்வதற்குச் சிறிய கண்ணாடியும் இருந்தால் விபத்திலேதான் முடியும் (போகும் பாதையைத் தெரிந்துகொள்வதற்குப் பெரிய கண்ணாடி பொருத்தப்பட்டிருந்தும் விபத்துக்கள் நிகழ்ந்துவிடுகின்றன.) மோட்டார் காரில் பொருத்தப்பட்டுள்ள இந்த இரு கண்ணாடிகள் எப்படி உபயோகப்படுகின்றனவோ, அவற்றை எப்படி உபயோகிக்கவேண்டுமோ அதே போலத்தான் பழம் பெருமையைச் சிறிதாகக் கவனித்து புதிய பாதையைப் பெரிதாகக் கவனிக்கவேண்டும். தமிழ்மக்கள் பழம் பெருமையை மட்டுமே பெரிதாகக் கருதிப் பேசிவந்ததால் தான் புதிய பாதையைச் சரியாகத் தெரிந்து கொள்ளமுடியாமல் பல விதமான விபத்துக்களில் சிக்கி இன்றைய அவல நிலைக்கு வந்துள்ளனர்.

தமிழ் இனம் குறிப்பாக இலங்கை வாழ் தமிழ் இனம் புதிய நோக்கையும் போக்கையும் பழையவற்றையும் மறந்துவிடாமல் பின்பற்ற முன்வரவேண்டிய காலம் வந்துவிட்டது. உழவுக்கும் தொழிலுக்கும் மதிப்பளித்து வாழ்ந்து பிறருக்கும் வழிகாட்டவேண்டிய காலம் வந்துவிட்டது. இன்று பிறக்கும் தை இதற்கு வழிகாட்டுமாக!

## இன்றைய பலன்

மேஷம்- இலட்சிய பாதைய நோக்கி இன்று பயணம் ஆரம்பமாகும். எதிர்பார்த்த பொருள் வரவும் கிடைக்கலாம்.

ரிஷபம்- பணம் பறிப்பதற்காக ஒரு கோடிஷ்யினர் புகழ்பாடிக்கொண்டிருப்பர். எவரிடத்திலும் அதிக நம்பிக்கை வைக்கவேண்டாம்.

மிதுனம்- தேனை இனித்தது இன்று வேம்பாக கசக்கும், மனப்போராட்டத்திற்கும் இடமுண்டு. இறை நம்பிக்கை நன்று.

கடகம்- அறவழியில் நாட்டம் பிறக்கும். புண்ணிய ஸ்தல யாத்திரையொன்றுக்குத் திட்டமிடப்படலாம். தெய்வசிந்தை மேலோங்கி நிற்கும்.

சிம்மம்- ஆத்திரப்படுவதன்மூலம் அருமையான சந்தர்ப்பத்தை இழக்க நேரிடும். செல்வாக்கும் பாதிக்கக்கூடும்.

கன்னி- நல்லதைச் செய்வீர்கள், நலன்பெருகும். பிரமுகர்கள் உங்களைத் தேடி வருவார்கள். சமூகத்தில் மதிப்பு உயரும்.

துலாம்- இதயத்தில் அமைதி குன்றும். குடும்பத்தில் சிறிய பூசல்கள் தோன்றிமறையும். சிறிய விடயத்திற்கும் அதிக கோபம் கொள்ளக்கூடும்.

விருச்சிகம்- தூரதேசவாசம் உங்களை துயரத்தில் ஆழ்த்தும். எதிர்பாராத விபத்திற்கும் இடமேற்படலாம். எதிலும் அவதானம் வேண்டும்.

தனுசு- குடும்பவாழ்க்கை இன்று சுமுகமாக இருக்கும். தூரத்து உறவினர் ஒருவர் உங்களுடன் ஒத்துழைப்பதற்கு முன்வருவார்.

மகரம்- செய்தொழிலில் தளர்ச்சி ஏற்படும். சதி செய்வதற்கு சகாக்களே சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டிருப்பர்.

கும்பம்- பெருமையுடன் தலைநிமிர்ந்து வாழுவீர்கள். பிதாவழித்தனமும் சேரும். தானதருமங்களில் ஈடுபாடு ஏற்படும்.

மீனம்- கடமையாற்றுமிடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். பயனுள்ள சந்திப்பு இன்று நிகழும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

# பழந்தமிழர் உன்...
# சின்னமே பொ...

— க. குரு...

தமிழ் மக்களது வாழ்வில் விழாக்களும் பண்டிகைகளும் குறைவின்றி இடம் பெற்றிருக்கின்றன. ஆயினும் தைப்பொங்கல் எனப்படும் தமிழர் திருவிழாஒரு குறிப்பிட்ட சமயத்தினர் இயற்றும் வழிபாடாகமட்டுமிராது. உழவர் திருநாளாகவே கொண்டாடப்பட்டு வருகின்றது இது சிறப்பாக உழவர் பெருமக்கள் தைத்திங்கள் தொடக்கத்தில் சூரியனைக் குறித்து இயற்றும் வழிபாடாகும்.

பொங்கல்வழிபாடு மக்கள் வாழ்வை மலரச் செய்யம் ஆதித்தனுக்கே உரியது. சூரிய வழிபாடு வேதகாலந் தொடங்கியே பரதகண்டத்திலிருந்து வந்திருக்கிறதெனவும் மந்திரங்களிலெல்லாம் சிறப்பானது காயத்ரி என்றும் சூரியனைக் குறித்த காயத்ரியே முதன்மையானதும் மற்றவைகட்கெல்லாம் ஆதாரமானதெனவும் கூறுவர். இம் மந்திரத்தை இந்தியாவில் காஷ்மீரத்திலிருந்து கன்னியாகுமரிவரை ஜெபித்து தியானிப்பவர்கள் ஏராளமாக உள்ளனர் என்றும் அறியக்கிடக்கின்றது. யார் நம் அறிவைத் தூண்டுகின்றாரோ அந்தச் சுடர்க் கடவுளின் மேலானஒழியைத் தியானிப்போமாக. என்பது அம்மந்திரத்தின் உட்பொருளாகும்.

சூரியதேவனுக்கென இந்தியாவிலே ஒரு தனிஆலயம் கோணறக்என்னும் இடத்திலிருக்கின்றது. மேலும் ஞாயிறுவழிபாட்டைப்பற்றி இளங்கோவடிகளும் சிலப்பதிகாரத்தில் கடவுள் வாழ்த்துப்பாவில் ஞாயிறைப் போற்றுதும் என... கூறுவதிலும் அங்கு அவ்வழிபாடு மிக உன்னதமான இடத்தை வகிக்கின்றதென்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

இவ்வித ஞாயிற்றுக்குரிய பொங்கல் வழிபாடு சிந்துவெளி நாகரிகம் உச்ச நிலையிலிருந்த காலத்திலே... ஆதி திராவிட இனத்தின... ரால் கைக்கொள்ளப்பட்டிருந்ததெனவும் ஆராய்ச்சியாளர் கூறுவர். முன் குறிப்பிட்ட வண்ணம் வே... காலத்திலே ம... இய... கையை வ... ம் மு... மேம்பாடு ...டைந்திரு... பொழுது சூரியவழிபாடு... தொடங்கியிருத்தல் அ... மானிக்கக் கூடியது. இ... இத் தைப்பொங்கற் தி... நாளை சாஸ்திர முறைப்ப... கூறுமிடத்து வடநூலா... சூரியன் தென்திசையாகி... தெட்சணாயனத்திலிருந்... (ஆடிமுதல் மார்கழிவரை) வடதிசையாகிய உத்தரா... யணத்திற்கு (தை முத... ஆனிவரை) மாறிச் செல்... தாகவும் இதை மகா சங்... ராந்தி (கடத்தல் என... பொருள்படும்) எனவுங் கூ... வர்


### நன்றிக் கைமாறு

இத் தைத் தினத்தில்தா... சூரியனுக்குப் பொங்க... செய்து வழிபடும் முறைமை... நம்முன்னோ...ிய திராவி... இனத்தவர் ... ழிநா... கைக்கொண்டு வருகி... றோம். இத் தைப்பொங்க... தினத்திலே பெரும்பாலா... தமிழ்மக்கள் தங்கள் வீட்... முன்றலில் மெழுகிய இட... தில் கோலமிட்டு புதி... பானையில் பசும்பால் கொ... க்கவைத்து நெற்களைக்குற்... யெடுத்த பச்சை யரிசியை... கலத்திலிருக்கும் பால்பொ... கியபின் சர்க்கரை பய... ஆகியவற்றுடன் கலத்திட்... பொங்கிப்படைத்து சூரி... னுக்கு நிவேதித்து வழிபா... செய்வார்கள். மேலு... பச்சையரிசி பானையில் இ... முன் கொதிக்கும் பாலான... கிழக்குத் திசையை நோ... கிப் பொங்கி ...ழிவதை... சகுனமாகவும் கொள்வ... சில இடங்களில் இப்பொ... கற் தினத்திற்கு முதன்நா... இந்திரனுக்குரிய போகி... பண்டிகையையும் மற்று... அநேகமாக உழவர்க... தைப்பொங்கலுக்கு அடுத்... நாள்பட்டிப்பொங்கலென்... மாட்டுப் பொங்கலையு... செய்து மகிழும் வழக்கமு... இருந்துவருகின்றது.

மருத நிலத்திற்குரியதெ... வமாகிய இந்திரன் மழை... யைத் தருவிக்கும் முகி... களை வாகனமாகக்கொண்... வனெனவும் கூறுவ... வானம் பொய்க்காது மழை...


அன்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும்
எமது அன்பு கலந்த
பொங்கல் வாழ்த்துக்கள்
ஹரன் ஜுவல்லர்ஸ்
(பிரபல நகை வியாபாரிகள்)
R. G. பில்டிங்
50, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்

எல்லோர்க்கும் எமது
பொங்கல் வாழ்த்துக்கள்!




நீடித்து
உழைப்பதில்
நிகரேதும்
இல்லாதது
யூ ஆசா
பற்றறிகளே
வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள்
துரை அன் கோ
23/3, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

உங்கள் அனைவருக்கும் எங்கள்
பொங்கல் வாழ்த்து உரித்தாகுக!
உயர்தர றேடியோக்கள்



விற்பதிலும் வாங்குவதிலும்
பழுதுபார்ப்பதிலும்
வடஇலங்கையில் முதல்தர ஸ்தாபனம்
S. சுலைமான்கண்டு & பிறதர்
5 & 7 மொம்சாக் கட்டிடம்
ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

பொங்கல் பூத்த புன்னகையும்
எங்கள் மாளிகைப் பொன்னகையும்
உங்கள் மனதிற்கின்பம் தரும்
அனைவருக்கும் எமது
பொங்கல் வாழ்த்துக்கள்
ராணி ஆபரண மாளிகை
224, கே. கே. எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.
Manager: KARAPUTUGALA

எல்லோருக்கும் எமது உளங்கனி...

நாதன் மியூசிக்...
(பிரபல இசைக்கருவி விற்பனையா...
23, மணிக்கூட்டு வீதி.

# (உ)ன்னத நாகரிகத்தின் (பொ)ங்கல் விழா

— க. குருநாதன் —

[illegible]

பெய்தாற்தான் நிலமெனும் நல்லாளான இயற்கை யன்னை சூரியனின் ஒளிர்க் கதிர்களின் உதவியுடன் செடி, கொடி, பயிர்கள், மரங்கள் வளரவும் அதனுல் நெல் மற்றும் தானியவகைகளும் மற்றும் உணவுப் பொருட்களையும் எமக்கு அளிக்க முடிகின்றது. ஆகையினுல் மனிதர்கள், விலங்குகள், பறவைகள் ஆகிய எல்லா உயிர்இனங்களும் நேரடியாகவோ மறைமுகமாகவே சூரியதேவனின் பிரபாவத்திஞற்ருன் உயிர் வாழ முடிகிறன்றதெனக் கூறலாம் அந்த நன்றியுணர்வின் பிரதிபலிப்பே தமிழ் மக்கள் கொண்டாடும் தைப் பொங்கலாகும், மேலும் பசிப்பிணி தீர்க்கும் உழவரை உழுவார் உலகத்திற்குஆணிஎன்பதும் சீரைத் தேடின் ஏரைத் தேடு என்பதும் உழவுத் தொழிலாகிய விவசாயத்தைச் செய்து மேன்மையுறுவதற் கொப்பாகிய வேறு பணியில்லை என்று வலியுறுத்தற் பொருட்டேயாகும். ஆகவே தான் இத்திருநாளை உழவர் திருநாளென விசேடமாகக் கூறும் வழக்கம் நிலவி வருகின்றது.

## பொங்கல் நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம் வியா.

காரைநகர் நவன்புரிச் சபையினுல் இன்று காரைநகர் இந்துக் கல்லூரி அரங்கில் 'பொங்கல் விழா நடைபெறுகிறது.

இவ்விழாவுக்கு உதவிபாதுகாப்பு வெளிவிவகார அமைச்சர் திரு. லக்ஷ்மன்ஜெயக்கொடியும் அவரது பாரியாரும்பிரதம அதிதிகளாகக் கலந்து கொள்கின்றனர்.

இவ்விழாவில் செல்விபிருந்தாகங்காதரனின் பரதநாட்டியமும், கொழும்பு ஆம்ஸ்ரோங் மல்யுத்தக் குழுவினரின் மல்யுத்தக்காட்சியும், 'இரண்டுவீட்டில்' என்ற நாடகமும் இடம்பெறும்.

0 0

இன்று மாலை துன்னலை தெற்கு நுணுவில் பிள்ளையார் கோயில் வீதியில் தமிழர் திருநாள் விழா கொண்டாடப்படுகிறது.

உடுப்பிட்டித் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. க. ஜெயக்கொடி தலைமையில் நடைபெறும் இவ்விழால் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, கரவை கிழார், திரு. மயிலை சிவசண்முகதாசன் ஆகியோர் உரையாற்றுகிருர்கள். கந்த முருகேசன் கவின்கலைமன்றம் அளிக்கும் 'இன்ப பொங்குமா', திருமலை நாமகள் நாடக மன்றத்தாரின் சக்கடத்தார்' ஆகிய நாடகங்களும் இவ்விழாவில் இடம் பெறுகின்றன.


அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது

தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

தைபிறந்தால் வழிபிறக்கும்! எமது தொடர்பால் வாழ்வு சிறக்கும் !!

காணி, வீடு, லாங்கலோ - விற்கவோ எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

லாண்ட் ரிரேட்ஸ்

(LAND TRADES)

இல. 35, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த

பொங்கல் வாழ்த்துக்கள்

ஈஸ்வர் கோப்பறேசன் அன்

றேடியோனிக்

(பிரபல றேடியோ உப-உறுப்பு இறக்குமதியாளர்களும், விற்பனையாளர்களும்;

18, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!

ஆரிய சந்தர்ப்பம்

நம்மவர்களில் வலது குறைந்தவர்களாகிய வாய் பேச இயலாதவர்கள், காது கேளாதவர்கள் ஆகிய இளம் வயதுள்ள ஆண்கள் பெண்களுக்கு எங்கள் ஸ்தாபனத்தில் நெசவுத்தொழில் பயிற்சி அளித்து அவர்கட்கு புனர்வாழ்வு அமைத்துக் கொடுக்க முன்வந்திருக்கின்றேம். விபரங்கட்கு 'வசந்த புரம் சில்க்ஸ்' 7. 2-ம்ஒழுங்கை, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு நேரில் வரவும்.

யாழ்ப்பாணத்தில்

'யுனிக்' றேடியோ விநியோகஸ்தர்களான

V. K. இராசரத்தினம் ஸ்தாபனத்தார்

தமது ஆதரவாளர்கள், பாவனையாளர்கள் அனைவருக்கும் தமது உளங்கனிந்த

பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றனர்

V.K.இராசரத்தினம்

பிரபல றேடியோ விற்பனையாளர்களும், திருத்துபவர்களும்.

95, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.

ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது

பொங்கல் வாழ்த்துக்கள்

சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் உங்கள்

டயர்களைப் புதுப்பிப்பதற்கு சிறந்த இடம்

நோர்தேன் இன்டஸ்றீஸ்

8/1. ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.

போன்: 7158

எல்லோர்க்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்




நீலமின்றி நிகரற்ற வெண்மை தருவது

விஜயாஸ் நீல சோப்

எங்கும் கிடைக்கும்

முருகானந்தா குடிசைக் கைத்தொழிற்சாலை

முகமாலை — எழுதுமட்டுவாள்

பொங்கல் வாழ்த்துக்கள்

ஆர். வி. ஜி. பீடி விற்பனையாளருக்கும் பாவனையாளருக்கும் ஆதரவாளருக்கும் எங்கள் உளங்கனிந்த

பொங்கல் வாழ்த்துக்கள்

10-1-1971 முதல் எமது ஆர். வி. ஜி. பீடிகளுக்கு விலை கூட்டப்பட்டுள்ளது.

இல்லறை விலை விபரம்

| | | |
|---|---|---|
| 1 | பண்டல் பீடி ரூபா | 12-25 சதம் |
| 1 | கட்டு பீடி | 65 சதம் |
| 1 | பீடி | 03 சதம் |

பாலக்காடு

ஆர். வி. ஜி. பீடி

தயாரிப்பாளர்கள் :

வ. வ. இராமசாமிப்பிள்ளை அன் சன்ஸ்

போன்: 230

தந்தி: ஆர்விஜி

47, பீச் றேட், யாழ்ப்பாணம்.

... உளங்கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்!

...ஸிக்கல் ஸ்ரோர்ஸ்

... விற்பனையாளர்களும், பழுது பார்ப்பவர்களும்)

யாழ்ப்பாணம்.

# "தமிழினம் சிந்தித்து தீர்க்கமான முடிவு காணும் காலம் வந்து விட்டது"

காரதீவு, புதன்

"இலங்கைவாழ் தமிழ் பேசும் இனம் தனது தற்போதைய நிலையைப் பற்றிச் சிந்தித்து தீர்க்கமான முடிவையெடுக்கவேண்டிய காலகட்டத்தில் இருக்கிறது. எஜமான் தனக்கு உணவு போடுகிறான் என்ற எக்களிப்பில், அதே எஜமான் தன்னை வெட்டிக் கறியாக்கப் போகிறானே என்பதை மறந்து குதூகலிக்கும் பன்றியைப் போல அற்பசலுகைகளுக்காக, எமது பண்டைய பாரம்பரியத்தை மறந்து, எல்லாளன், சங்கிலியன் போன்றவர்களால் இலங்கை ஆளப்பட்ட சரித்திரத்தை உணராது, ஆளும் இனத்துக்கு அடிபணிவதா அல்லது எமக்கென்றொரு அரசை தமிழ்க்கலை, கலாச்சாரத்தைப் பேணிப்பாதுகாக்கக்கூடிய தமிழ்ஈழத்தை உருவாக்க உழைப்பதா என்பதைத் தமிழினம் முடிவு செய்யவேண்டும். தமிழருக்குத் தனியரசை ஸ்தாபிப்பதுதான் சிறந்தது என முடிவெடுக்கும் இளைஞர்கள் அப்பணி நிறைவேற தம்மை அர்ப்பணிக்கவேண்டும். இஸ்ரவேல் போன்ற நாடுகளின் சரித்திரத்தைப் படித்து வரும் தமிழ் இளைஞர் சமுதாயம், எழுச்சிபெற்றுஏற்ற மிகு தமிழ் ஈழம் அமைக்க முன்வரவேண்டும். நிச்சயமாக ஈழத்தின் சந்துபொந்துகளில் இருந்தெல்லாம் தமிழ் இளைஞர்கள் புறப்பட்டுவருவார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு"

இவ்வாறு தீவுப்பகுதி முன்னாள் ஆட்சிமன்ற உறுப்பினரும், தமிழர் சுயாட்சிக் கழகத் தலைவருமான திரு. வ. நவரத்தினம் காரைநகர் சைவ மகாசபை மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

திரு. ந. தர்மராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. வ. நவரத்தினம் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது: 'தமிழ் உணர்ச்சியைத்தட்டி எழுப்பி தமிழினத்தின் விடுதலை வாழ்வுக்கு அடிகோல ஒவ்வொரு தமிழ் இளைஞனும் முன்வரவேண்டும்"

— —

மன்னார்

## கி. ச. தலைவர்கள் யார் யார்?

யாழ்ப்பாணம், வியா.

மன்னார் கிராமசபைகளுக்கான தலைவர்கள் யார் யார் என்ற விபரம் இம்மாதம் 16, 17 18, 20ந் திகதிகளில் தெரிந்துவிடும்.

இம்மாதம் 16ந் திகதி பனங்காமம் கிராம சபைத் தலைவர் தேர்தலும், 17ந் திகதி அடம்பன், உயிலங்குளம், திருக்கேதீச்சரம் ஆகிய இடங்களுக்கும், 18ந் திகதி முசலி வடக்குக்கும், 20-ந் திகதி மேற்கு மூலைக்கும் கிராமசபைத் தலைவர் தெரிவு நடைபெறும்.

— —

## அரசாங்கம் பேக்கரிகள் நிறுவும்

கோட்டை, புதன்

மாணவர்களுக்கு சத்தான உணவு வழங்கும் பொருட்டு நாடெங்கும் பேக்கரிகளை நிறுவ கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது. இந்த பேக்கரிகளில் சுமார் 5000 பேருக்கு புதிதாகத் தொழில் வசதி கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இவற்றிற்குத்தேவையான மாவை கெயர்' ஸ்தாபனம் இலவசமாக வழங்குமாம்.

— —

## உடுப்பிட்டி கி. ச. தலைவர் தேர்தல்

உடுப்பிட்டி, புதன்

உடுப்பிட்டிக் கிராம சபையின் புதிய தலைவரைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல் எதிர்வரும் 16ம் திகதி உடுப்பிட்டிக் கிராம சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இரு கி. சபைகளுக்கு

## 22-ம் திகதி தலைவர் தெரிவு

புலோலி, புதன்

உடுப்பிட்டி, புலோலி கிராம சபைகளின் தலைவர் பதவிகளுக்கான தேர்தல் இம்மாதம் 22ம்திகதி அவ்வக் கிராமசபை அலுவலகங்களில் யாழ். மாவட்டத் தேர்தல் அதிகாரி முன்னிலையில் நடைபெறவிருக்கிறது.

உடுப்பிட்டிக் கிராமசபை தலைவர் தேர்தல் காலை 10 மணிக்கும், புலோலிக்கிராம சபை தலைவர் தேர்தல் பிற்பகல் 2 மணிக்கும் நடைபெறுமென தேர்தல் அதிகாரி அறிவித்துள்ளார்.

## கட்டுரைப் போட்டியும் கருத்தரங்கும்

கோட்டை, புதன்

ஸ்ரீ லங்கா சாகித்திய மண்டலத்தின் விஞ்ஞான இலக்கியக்குழு கருத்தரங்கு ஒன்றையும் விஞ்ஞானக் கட்டுரைப்போட்டி ஒன்றையும் நடாத்தமுடிவுசெய்துள்ளது.

கருத்தரங்கிலே வெகுஜன விஞ்ஞான இலக்கியம் படைக்கும் முறை, விஞ்ஞான நாவல்கள் போன்ற துறைகளிலே அறிஞர்களால் கட்டுரைகள் படிக்கப்பட்டு விவாதங்கள் நடத்தப்படும். இக் கருத்தரங்கம் முதலில் சிங்களத்திலும் அதையடுத்துத் தமிழிலும் நடத்தப்படும்.


எல்லோர்க்கும் எமது அன்பு கலந்த
பொங்கல் வாழ்த்துக்கள் உரித்தாகுக
ஆ. வைத்திலிங்கம் அன் கோ
(பிரபல பலசரக்கு வியாபாரிகள்)
45, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்
போன்: 663

அனைவருக்கும் எமது இதயம் கனிந்த
பொங்கல் வாழ்த்துக்கள் !
அழகினுக்கு அழகு செய்வன
ஆபரணங்களே !
நம்பிக்கையான நவநாகரிக
தங்க நகைகள் வேண்டுமா !!
இன்றே வருகை தாருங்கள்
பொ. அம்பலவாணர்
தங்க, வைர நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட் யாழ்ப்பாணம்
போன்: 7099 தந்தி: வைரம்

அன்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும்
எமது
பொங்கல் வாழ்த்துக்கள்!
அபிஷேகத் திரவியங்கள்
சந்தனக் குழம்பு
(மைசூர், அவுஸ்திரேலியா சந்தனக் கட்டைகளால் தயாரிக்கப் பெற்றவை)
★ பழனி வாசனை விபூதி
★ அபிஷேக குங்குமம்
★ பஞ்சாமிர்த சாமான்கள்
★ நைவேத்திய சாமான்கள்
வாசனை மிகுந்த தெய்வீக மணம் கமழும்
★ "ராதா" பத்மினி ஐவ்வாது பத்தி
★ 99 & 999 ஐவ்வாது பத்தி
★ சக்தி, பூஜா அகர் பத்திகள்
விளைவு சூடம், சாம்பிராணி
மற்றும்
கோவில் தேவைகளுக்கான
சகலவிதமான சாமான்களும் நிதானமான
விலையில்எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
எஸ். சுப்பிரமணியம்
அன் கொம்பனி
53, கே. கே. எஸ். ரோட், பெரியகடை, யாழ்ப்பாணம். போன்: 541 Residence: 7068
"பாலேந்திரா பில்டிங்" 160, செட்டியார் தெரு, கொழும்பு-11. போன்: 35825

எல்லோர்க்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்!
உங்கள் தோட்டங்களுக்கு நீர்ப்பாசனம் செய்ய
"வூல்ஸிலி" பம்புகள்
உங்கள் புகையிலைக் கன்றுகளை அழிக்கும் பூச்சி - புழுக்களை அழிக்க கிருமி நாசினிகள்
"பிளக்" ஸ்ரார் தெளி கருவிகள்
மற்றும்
பல மோட்டார் உதிரிப் பாகங்கள் நீர்ப்பாசன இயந்திரங்களுக்குத் தேவையான
சகல விதமான உதிரிப்பாகங்களுக்கும்
உடனே விஜயஞ் செய்யுங்கள்
ஸ்டீல்சன்ஸ்
( மோட்டார் அன் என்ஜினியரிங் டிவிஸன் )
20/5, ஸ்ரான்லி ரோட் யாழ்ப்பாணம்
முள்ளுக்கம்பி, கம்பி ஆணி, யானை மார்க் அஸ்பெஸ்டஸ் கூரைத் தகடுகள்
அரசாங்கக் கட்டுப்பாட்டு விலைக்கு விற்பனைசெய்யும் ஒரே ஒரு ஸ்தாபனம்
ஸ்டீல்சன்ஸ்
( பிரபல இரும்புச் சாமான் வியாபாரிகள் )
287 - 289, ஸ்ரான்லி ரோட், ( போன்: 7035 ) யாழ்ப்பாணம்.

ஏழுபேர்:

## உதைபந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், வியா. யாழ். மாவட்ட அரசாங்க ஊழியர் விளையாட்டுச் சங்கத்தினால் தற்போது வரும் "ஏழுபேர்" கொண்ட உதைபந்தாட்ட 'நொக் கவுட்' போட்டியின் முடிவுகள் சில வருமாறு:-

### தபால் கோஷ்டி

யாழ். தபால் இலாகா உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் இ. போ. ச. உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் தபால் இலாகாக் கோஷ்டி ஆட்ட இறுதியில் 1-0 கோலால் வெற்றி பெற்றது.

### சீமெந்து கோஷ்டி

காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுஸ்தாபனக் கோஷ்டிக்கும் சேவயர் இலாகாக்கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் சீமெந்துக் கோஷ்டி மிகஇலகுவாக 7-0 கோல்களால் வெற்றி பெற்றது.

### பொலிஸ் வெற்றி

யாழ். பொலிஸ் கோஷ்டிக்கும் மாநகரசபை 'பி' பிரிவுக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் பொலிஸ் கோஷ்டி 1-0 கோலால் வெற்றி பெற்றது.

## உதைபந்தாட்ட விழா இன்று நடைபெறுது

யாழ்ப்பாணம் வியா. யாழ்ப்பாணப் பாடசாலை விளையாட்டுச்சங்கத்தினால் இன்று யாழ். விளையாட்டரங்கில் நடாத்தப்படவிருந்த உதைபந்தாட்ட விழா கவனர் ஜெனரல் திரு. வில்லியம்கோபல்லவாவின் யாழ்ப்பாணவிஜயத்தை முன்னிட்டுப்பின் போடப்பட்டுள்ளது. (தே. நி.)

## இடமாற்றம்

ஊரதிவு, புதன் ஊரதிவு திருநாவுக்கரசு வித்தியாசாலையின் பதில் தலைமையாசிரியர் திரு சி. இரத்தினசபாபதி, திருகோணமலை குச்சவெளி மகாவித்தியாலயத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். நயினாதீவு மகாவித்தியாலய ஆசிரியை, பண்டிதை திருமதி புனிதவதி பாலசுந்தரம் யாழ்ப்பாணம் மத்தியகல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## மாநகரசபை வென்றது

யாழ். மாநகரசபை 'ஏ' பிரிவுக் கோஷ்டிக்கும் சீமெந்துக் கூட்டுஸ்தாபனக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற கடுமையான போட்டியில், மாநகரசபைக் கோஷ்டி 1-0 கோலால் வெற்றிபெற்றது. (தே. நி.)

மட்டக்களப்பு

## புதிய அரசாங்க அதிபர்



யாழ்ப்பாணம், வியா மட்டக்களப்பு மாவட்டத்திற்கு புதிய அரசாங்க அதிபராக திரு. ரி. பாலச்சந்திரன் இம்மாதம் தொடக்கம்நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. ரி. பாலச்சந்திரன், மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு வருடம் பதில் அரசாங்க அதிபராகவும் கடந்த மூன்று வருடங்கள் உதவி அரசாங்க அதிபராகவும் கடமையாற்றியவர். முன்னாள் மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு. டி. தேசையா இம்மாதம் தொடக்கம் உள்ளூராட்சி அமைச்சில் கடமையாற்றுவார்.

## பிரெஞ்சு எம்.பி. க்கள் இன்றுவிஜயம்

கோட்டை, புதன் பிரெஞ்சு ஆட்சி மன்றத்தாரின் குழுவொன்று இன்று இலங்கைவருகிறது. இக்குழு இம்மாதம் 19ந்திகதி வரையும் இங்குதங்கியிருக்கும்.

## வரியிறுப்பாளர்கள் சங்கம் அமைத்தனர்

யாழ்ப்பாணம், வியா. கோப்பாய் கிராமசபையின் புதிய சோலைவரித் திட்டத்திற்கு எதிர்த்து நடவடிக்கைகள் மேற்கொள்ளுமுகமாக கோப்பாய் வரியிறுப்பாளர்கள் சங்கம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

பின்வருவோர் சங்கஉத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டார்கள்.

தலைவர்: வ. முத்துக்குமாரசாமி, உபதலைவர்கள். கி. சோமசுந்தரம், இ. இராமலிங்கம், செயலாளர்: வி. அரியரத்தினம், உதவிச்செயலாளர் ஏ. ஜெயரத்தினம், தனாதிகாரி: ஏ. காசிநாதன். ஒன்பதுபேர்கொண்ட கமிட்டியும் தெரிவுசெய்யப்பட்டது.

யாழ். மத்தியகல்லூரியின் பழையமாணவரான திரு. ரி. பாலச்சந்திரன் யாழ். மாவட்டத்தில் தலைமைக் காரியாதிகாரியாகவும் முன்னர் கடமையாற்றியவர். (தே. நி.)

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அல்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 திருப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7.30 இசைச்சித்திரம், 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 நாதஸ்வரம் — என். கே. பத்மநாதன்.

344 மீ. அல்ட் 49 மீ.

9-30 பொங்கல் கவியரங்கம், 10-15 பாட்டு. 10-55 பாட்டு' 11-20 புல்லாங்குழல், பகல் 12-00 திரை இசை, 1-00 திரைகானம்,

344 மீ. அல்ட் 61 மீ.

மாலை 4-30 கல்வி ஒலிபரப்பு, 4-45 சங்கமம், 5-00 பிறந்தநினவாழ்த்துக்கள், 5-30 ஒடிவிளையாடு பாப்பா,

இரவு 6-10 பேச்சு, 6-15 வயலின், 6-30 விவசாய நிகழ்ச்சிகள், 6-45 கண்ணகி காவியம், 7-00 பொங்கல் தின நிகழ்ச்சிகள், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 உரையாடல், 10-00 நேயர் விருப்பம், 10-30 செய்தித் தொகுப்பு.

சக்தி வாய்ந்த
சர்வ பூச்சி நாசினி

பொலிடோல் ஈ·605

எல்லாக் கிருமிப் பீடைகளையும் இல்லாதொழித்து, பயிர்கள் செழிக்கவும் விளைச்சல் பெருகவும் செய்வது பொலிடோல்.

அழுக்கணவன், ஓட்டுண்ணி, பயிர்ப்பேன், பனிப்பூச்சி, இலைபரிப் புழு போன்றவற்றை அது அடியோடு கொல்லித்துவிடும்.

நெல், புகையிலை, உருளைக்கிழங்கு, மிளகாய், வெங்காயம், காய்கறி முதலிய எவ்வித பயிர்ச் செய்கையையும் பாதிக்கும் எல்லாவித பூச்சி, புழுக்கள், கிருமிகளையும் அழிக்கும் சக்தி வாய்ந்தது— பொலிடோல்.

100 சி. சி. (4 அவுன்ஸ்) விலை— ரூ. 5/50
250 சி. சி. (9 அவுன்ஸ்) விலை— ரூ. 11/-
1000 சி. சி. (35 அவுன்ஸ்) விலை— ரூ. 37/-

பொலிடோல் ஒரு பேயர் தயாரிப்பு. நம்பிக்கையான விஷயமறிந்த விநியோகஸ்தரிடம் கிடைக்கும். இலவச அறிவுரைச் சேவைக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

பயிர்களைக் காத்துப் பண லாபம் பெறப் பாவியுங்கள்—
பேயர் விவசாய ரசாயனப் பொருள்கள்.





மூலப் பொருட் சத்து உற்பத்தியாளர்: பேயர், ஜெர்மனி

BAYER

இலங்கையில் தயாரிப்போர்: ஹேக்கெம் லிமிட்டெட் 400, டின்ஸ் வீதி, கொழும்பு 10.

P.9993

பாவனையாளருக்கு
ஓர் அறிவித்தல்
பொலிடோல் ஈ 605

சக்தி வாய்ந்த சர்வ பூச்சி நாசினியான
பொலிடோல் ஈ 605

ஜெர்மனியைச் சேர்ந்த பேயர் நிறுவனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் இலங்கையில் தயாரிக்கப்படுகிறது.

கடினமான தரக் கட்டுப்பாட்டின் கீழ் தயாரிக்கப்படும் பொலிடோல் ஈ 605 அலுமினியக் கொள்கலங்களில் தற்போது கிடைப்பினும், சில கட்டுப்பாடுகளின் விளைவாக, இனிமேல் இவற்றை இறக்குமதி செய்யமுடியாது. எனவே, கையிருப்பு முடிந்ததும்

100 சி. சி; 250 சி. சி; 1,000 சி. சி.
அலுமினியக் கொள்கலன்களுக்குப் பதிலாக,
4 அவுன்ஸ், 10 அவுன்ஸ், 16 அவுன்ஸ்

போத்தல்களில் இதை விற்பனை செய்யவிருக்கிறோம். இதனால், சிக்கன அளவில், குறைந்த விலையில், பாதுகாப்பான முறையில் பொலிடோல் ஈ 605 பாவனையாளருக்குக் கிடைக்கும்.

தரத்தில் எவ்வித மாற்றமும் இல்லாத பொலிடோல் ஈ 605, பேயர் வியாபாரச் சின்னத்துடனேயே விற்பனையாகும்.

துண்டுப்பிரசுரத்தில் காணும் பாதுகாப்பு விதிகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கவும்.

புதிய விலைகள் வருமாறு:

| | | |
|---|---|---|
| 4 அவுன்ஸ் போத்தல் | — | ரூ. 5/- |
| 10 அவுன்ஸ் போத்தல் | — | ரூ. 10/50 |
| 16 அவுன்ஸ் போத்தல் | — | ரூ. 16/50 |

எல்லாக் கிருமிப் பீடைகளையும் இல்லாதொழித்துப் பயிர்களைக் காத்துப் பண லாபம் பெறப் பாவியுங்கள் - பொலிடோல் ஈ 605. நம்பிக்கையான விஷயமறிந்த விநியோகஸ்தரிடம் கிடைக்கும். இலவச அறிவுரைச் சேவைக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

ஹேக்கெம் லிமிட்டெட்
400, டின்ஸ் வீதி,
கொழும்பு—10

சிங்கப்பூரில்

# வீடமைப்புத் திட்டங்களை பிரதமர் பார்வையிட்டார்

சிங்கப்பூர், ஜன 12 இலங்கைப் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இன்றுகாலை சிங்கப்பூர் வீடமைப்புத் திட்டங்களைப் பார்வையிட்டார். அங்குள்ள இருமாடி வீட்டுக்கட்டிடங்களுக்குச் சென்று அதன் அமைப்பு முறைகளை பார்வையிட்ட பிரதமர் அதற்கு முன்பாக சிங்கப்பூர் தேசிய வீடமைப்பு அபிவிருத்திதிட்ட தலைமையகத்திற்குச் சென்றார். அதன் தலைவர் திரு. குமாரசாமி. சிங்கப்பூர் தேசிய வீடமைப்பு மாதிரிப் படங்கள் மூலம் பிரதமருக்கு விளக்கிக் கூறினார். அண்மைக்காலத்தில் அங்கு 10 ஆயிரத்திற்கு அதிகமான மாடிவீட்டுக் கட்டிடங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக திரு. குமாரசாமி பிரதமரிடம் தெரிவித்தார்.

இதற்கிடையில் சிங்கப்பூர் பத்திரிகைகள் இலங்கைப் பிரதமருக்கு முக்கிய மளித்து செய்திகள் பிரசுரித்துள்ளன.

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, புதன்

நேற்று இழுக்கப்பட்ட தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:-

1-வது பரிசு
41 Q 0872 ரூ. 1 லட்சம்

2-வது பரிசு
22 P 0600 ரூ. 40 ஆயிரம்

3-வது பரிசு
34 P 0262 ரூ. 10 ஆயிரம்

தலா ரூ. 501-10 சதம் பெறும் 100 ஆறுதல் பரிசுகள் வருமாறு:-

| | |
|---|---|
| 20 A 0991 | 17 A 0391 |
| 08 A 0827 | 32 A 0353 |
| 20 A 0213 | 26 A 0970 |
| 15 A 0083 | 20 B 0770 |
| 39 B 0089 | 12 B 0153 |
| 15 B 0667 | 17 C 0517 |
| 08 C 0711 | 14 C 0297 |
| 19 D 0257 | 13 [illegible] 0999 |
| 03 D 0922 | 19 D 0002 |
| 41 E 0312 | 34 E 0932 |
| 05 E 0561 | 26 E 0641 |
| 15 E 0795 | 25 F 0954 |
| 16 F 0747 | 32 G 0333 |
| 15 G 0126 | 33 H 0569 |
| 06 H 0851 | 32 H 0684 |
| 34 J 0139 | 23 J 0229 |
| 05 J 0702 | 37 J 0001 |
| 28 K 0539 | 14 K 0361 |
| 02 K 0862 | 11 K 0937 |
| 18 K 0594 | 18 [illegible] 0889 |
| 10 L 0871 | 11 L 0401 |
| 36 L 0936 | 01 M 0556 |
| 37 M 0625 | 36 M 0167 |
| 30 M 0391 | 40 N 0691 |
| 10 N 0867 | 31 N 0514 |
| 21 o 0603 | 13 O 0196 |
| 07 O 0662 | 32 O 0633 |
| 12 P 0610 | 26 P 0056 |
| 34 P 0413 | 38 P 0309 |
| 39 P 0399 | 16 P 0720 |
| 33 P 0212 | 24 p 0052 |
| 30 p 0416 | 20 P 0289 |
| 37 Q 0521 | 28 Q 0402 |
| 20 Q 0177 | 37 Q 0583 |
| 88 R 0132 | 05 S 0914 |
| 10 S 0696 | 40 S 0563 |
| 41 S 0374 | 41 S 0013 |
| 31 T 0512 | 15 T 0153 |
| 03 T 0903 | 11 T 0437 |
| 14 U 0355 | 27 U 0074 |
| 03 U 0179 | 31 V 0730 |
| 08 V 0476 | 01 V 0607 |
| 22 V 0859 | 07 V 0377 |
| 08 V 0938 | 08 W 0225 |
| 04 W 0767 | 06 W 0988 |
| 03 W 0018 | 14 X 0563 |
| 07 X 0605 | 07 X 0785 |
| 24 X 0285 | 38 X 0969 |
| 29 Y 0125 | 31 Z 0300 |
| 35 Z 0927 | 21 Z 0561 |

(இவையாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்)

## அமைச்சர் சுபசிங்ஹ

யாழ்ப்பாணம், புதன்

இம்மாதம் 27ந்திகதி கைத்தொழில் அமைச்சர் திரு. ரி. பி சுபசிங்கா யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும் போது ஆனையிறவு உப்பளத்தைப் பார்வையிடும் சமயத்தில் சாவகச்சேரி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிமத்தியகமிட்டிக் காரியாலயத்துக்கு விஜயம் செய்வார் இத்தகவலை அமைச்சர் சுபசிங்கா சாவகச்சேரி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி காரியதரிசி திரு. எம். இராமலிங்கத்துக்கு கடித மூலம் அறிவித்துள்ளார். கச்சாய் உப்பளம், தும்புத் தொழிற்சாலை முதலியவற்றை நேரிற் பார்வையிடுவதாகவும் அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

சாய்ந்தமருது, செவ்வாய்

கல்முனை ஆட்சிமன்ற உறுப்பினர் ஜனாப் எம். ஸி. அஹமது அவர்களின் வேண்டுகோளின் பேரில் இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனக் கல்முனைக் கிளை கல்முனை நகரில் மீன்விற்பனவு நிலையம் ஒன்றை மிக விரைவில் திறக்கவுள்ளது.

இலங்கை மகாதேசாதிபதி மாட்சிமை தங்கிய

திரு. வில்லியம் கோபல்லாவ எம். பீ. ஈ. அவர்கள்

யாழ்ப்பாணத்திற்கான மஸ்கேலியா ஓயா நீர் மின்திட்டத்தை

யாழ்ப்பாணம் திறந்தவெளி அரங்கில்

1971-ம் ஆண்டு

ஜனவரி மாதம் 16-ம் திகதி

மாலை 6-15 க்கு தொடக்கிவைப்பார்.

கலாச்சாரத் திணைக்களம் யாழ். பிரதேசக் கலாமன்றத்தின் அனுசரணையுடன் மாலை 6-30 க்கு திறந்த வெளி அரங்கில்

ஈழ நடன விருந்தளிப்பர்.

(கண்டிய, கீழ்நாட்டு, பரதநாட்டியம் மற்றும் கீழ் மாகாண கிராமிய நடனம்)

அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

அரசாங்க அதிபர்
செயலகம், யாழ். மாவட்டம்
யாழ்ப்பாணம் 1971-1-10. 2729

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு தை மாதம் 14- திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது

## இன்று

யாழ்ப்பாணம் வியா

தமிழ்காங்கிரஸ் நல்லூர் கிளையின்கூட்டம் இன்று பிற்பகல் யாழ்ப்பாணம்பிறவுன் வீதியிலுள்ள விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் நல்லூர் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வி. அருணம்பலம் தலைமையில் நடைபெறுகிறது.

0 0 0

யாழ்ப்பாணம், வியா

தொண்டமானாறுசெல்வச் சந்நிதியில் தைப் பொங்கல் தினத்தன்று சமயப் பிரசங்கங்கள் நடைபெற உள்ளன.

## மகாதேசாதிபதி.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நீர் மின்சாரவினியோகம் செய்யும் வைபவத்தில் கலந்து கொள்ளும்மகாதேசாதிபதி. மின்விசையை அழுக்கி மின் திட்டத்தை ஆரம்பித்து வைப்பார் மாலை 6-30 மணிக்கு திறந்தவெளியரங்கில். கலை நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

17-ம் தேதி காலை 8-30 மணிக்கு மகாதேசாதிபதி கிங்ஸ் கவுஸிலிருந்து புறப்பட்டு விமான நிலையத்தைச் சென்றடைவார். மகாதேசாதிபதியின் ராஜபவனி கிங்ஸ்கவுஸிலிருந்து புறப்பட்டு பொலிஸ்நிலைய சந்தி, சி எஸ் கே சந்தி, முட்டாசுக்கடைச்சந்தி வழியாக மானிப்பாய்வீதியால்திரும்பி வைத்தீஸ்வர கல்லூரி சந்தி, சிவன் கோவில்சந்தி வழியாக காங்கேசன்துறை வீதி வழியாக, கில்லனர்கல்லூரி வீதி வழியாக தட்டாதெரு சந்திக்குச்சென்று இடதுபக்கம் திரும்பி ஐயனார்கோவில் வீதிவழியாக ஓட்டுமடம் சந்திக்கு சென்று மானிப்பாய் ரோட்டு சந்தியை அடைந்து அங்கிருந்து மானிப்பாய்-கைதடி வீதிவழியாக, மருதனாமடம் சந்தியை வந்தடையும், அங்கிருந்து காங்கேசன்துறை வீதிவழியாக சுன்னாகம், மல்லாகம், தெல்லிப்பழை வந்தடைந்து காங்கேசந்துறை - பருத்தித்துறை வீதி சந்தியை வந்தடையும். அங்கிருந்து மயிலிட்டி ஊடாக பலாலி சந்தியை அடைந்து தெற்கு பக்கத்தால் திரும்பி விமான நிலைய சந்தியினால் விமான நிலையத்தை வந்தடையும்.

17-ம் தேதி காலை மகாதேசாதிபதிக்கு வைத்தீஸ்வர கல்லூரி சந்தி, கில்லனர் கல்லூரி சந்தி, மானிப்பாய் இராமநாதன்கல்லூரி சந்தி, சுன்னாகம், மல்லாகம், தெல்லிப்பழை, காங்கேசன்துறை மயிலிட்டி ஆகிய இடங்களில் வரவேற்பு அளிக்கப்படும்.

இவ்வைபவத்தில் கலந்து கொள்ள வீடமைப்பு கட்டுத்துறை அமைச்சர் திரு. பீற்றர் கெனமன், இன்று வருகின்றார். நாளை தபால் அமைச்சர் திரு. எஸ் குமாரசூரியர் மற்றும் அமைச்சர்கள் மகாதேசாதிபதியுடன் வருவார்கள்.

## திருமணம்

மணமகன்: திருநிறைசெல்வன் சி. பொ. சிவராசா (சினிமாஸ் லிமிட்டெட்)

மணமகள்: திருநிறைசெல்வி ஐ. சி. சற்குணதேவி

காலம்: தை மாதம் 5ந் திகதி (18-1-71) மாலை 5-00—6-00 மணிக்கிடையில் உள்ள சுபநேரம்

இடம்: வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள் கோவில்

உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

திருமதி ஆர். பொன்னம்பலம்
10, கன்னாதிட்டி வீதி
யாழ்ப்பாணம்.

# தொழிலாளர் மோதலில் ஒருவர் மாண்டார்

கொழும்பு, செவ். அவிசாவளைத் தேர்தல் தொகுதியில் இன்று இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவமொன்றில் ஒருவர் கொல்லப்பட்டார். நால்வர் படுகாயமடைந்தார்கள். இந்தச் சம்பவம் கொஸ்கம என்ற இடத்தில் நடந்துள்ளது.

ஒட்டுப்பலகை கூட்டுத்தாபனத்தின் தொழிலாளர்களுக்கும் [illegible] செய்யப்பட்ட கூட்டுத்தாபனத் [illegible] தொழிலாளர்களுக்கு [illegible] கூட்டுத்தாபன தொழிற்சாலையின் அருகில் ஏற்பட்ட ஒரு மோதலில் இச் சம்பவம் [illegible] நடந்துள்ளது.

மோதலில் ஈடுபட்ட ஒரு பகுதியினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகக் கூறப்படுகிறது. (சி. பி. ர)

# அரபு நாடுகளுக்கு வர்த்தக தூதுகோஷ்டி செல்லும்

கோட்டை, செவ்வாய்

அரபு நாடுகளுக்கு விரைவில் செல்லவிருக்கும் வர்த்தகத் தூதுக்கோஷ்டிக்கு உள்நாட்டுவெளிநாட்டு வர்த்தகஅமைச்சர் திரு. ரி பி இலங்கரத்தின தலைமை தாங்கிச் செல்லவிருக்கிறார் அரபு நாடுகளுடன் தேயிலை வர்த்தகம் பற்றி இவர் இந் நாட்டு தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவார் தேயிலை மற்றும் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு சந்தை ஏற்படுத்தும் பணியில் இவர்களது விஜயம் வெற்றி அளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது

இதே நேரத்தில் 70 லட்சம் ரூத்தல் தேயிலை விற்பனவு செய்யப்பட்டுள்ளது இந்தத் தேயிலை ஐ. அ. குடியரசு, ஈரான் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது இதனால் இப்பொழுது தேயிலையின் விலையில் 10 சதம் வீதம் அதிகரித்துள்ளது

அரபு நாடுகள் இலங்கையிடமிருந்து தேயிலை, மற்றும் சில பொருட்களை வாங்க முன்பு விருப்பம் தெரிவித்திருந்தன

## மீனவர் குடியேற்றத் திட்டம்

ஊர்காவற்றுறை, புதன்

புங்குடுதீவு-கேரதீவு மயானத்தில் குடியேற்றத் திட்டம் ஒன்று உருவாக்கப்பட இருக்கிறது. இப்பகுதியிலுள்ள மீனவர்களே இங்கு குடியேற அனுமதிக்கப்படுவர் என அறியப்படுகிறது.

சினிமா ரஸிகர்களுக்கும் மற்றும் அன்பர்களுக்கும்
எமது உளம் நிறைந்த
பொங்கல் வாழ்த்துக்கள்

வெஸ்லி சினிமா
(மானிப்பாய்) தினசரி 3 காட்சிகள்
விஜயன் - ஜெயலலிதா
நடிக்க
மொடேர்ண் தியேட்டர்ஸாரின் மகத்தான தயாரிப்பு
ஸி. ஐ. டி. - 116
(புதிய தமிழ் வெளியீடு)

சினிமா ரஸிகர்கள் மற்றும்
அன்பர்கள் - ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின்
பொங்கல் வாழ்த்துக்கள்!

கெப்பிட்டல் பிளாஸா லைஸன்
(கொழும்பு) (கொழும்பு) (கொழும்பு)

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்

சிவாஜி - காஞ்சனா
ஜோடியுடன்
இன்னும் பலர் நடித்த
சிவந்த மண்
(ஈஸ்ட்மன் வர்ணச் சித்திரம்)

5வது வாரம்
ரீங்ஸ்லி 2-00, 6-00, 9 30
ஏ.வி.எம்.ராஜன் வாணிஸ்ரீ
சிவகுமார் நடித்த
அன்னையும் பிதாவும்